## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **MCOP.No. 89 /2022** | **Date : 26.09.2025** | **PW 1** |
| Name: புவனேஸ்வரி | க/பெ. அன்பு | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டி சென்ற வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என் கணவருக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் அந்த இருச்சக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். விபத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யாரோ ஒருவர் போன் மூலம் எனக்கு சொன்னபிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றாலும் என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அதனால் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் தலை கவசம் அணியாததால் அவருக்கு தலையில் அடிப்பட்டு அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஓரமாக நிறுத்தி வைத்திருந்த டிராக்டரின் டெய்லர் மீது என் கணவர் வண்டியை மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் அஜாக்ரதையால் சென்றதால்தான் விபத்து நடைபெற்றது என்றாலும் அதை இழப்பீடு வழங்கும்போது கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவரின் வயது, வருமானம் தொழில் ஆகியவற்றை காண்பிப்பதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்கிறேன். நான் மனுவில் கேட்டுள்ள நஷ்டஈடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனது மகனும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் மூன்று நபர்கள் ஒன்றாக செல்லாமல் இருந்திருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/—புவனேஸ்வரி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP 89/2022

Deposition of PW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 26.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | சுதா | **Caste** | : | |
| **W/o.** | **:** | மாதேஷ் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். நான் சென்ற இருசக்கர வாகனம் TN 93 B 5673 TVS XL என்றால் எங்கள் வண்டியின் வாகன எண் தெரியாது. விபத்து சம்மந்தமாக போலிசார் வந்து என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை என் கணவரை விசாரித்தனர். விபத்து சம்மந்தமாக போலிசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மனுதாரரை எனக்கு 14 வருடங்களாக எனக்கு பழக்கம். மனுதாரரை 14 வருடங்களாக பழக்கம் என்பதால்

அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உதவி செய்யும் நோக்கில் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டியது என்றால் சரியல்ல.

ஒம்/—சுதா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.